தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

10-03-2025

# தமிழகத்தின் மதநல்லிணக்க மலையாக திருப்பரங்குன்றத்தை அறிவிக்க வேண்டும்

## மாநாட்டில் வலியுறுத்தல்

மதுரை,மார்ச்.10-
தமிழகத்தின் மதநல்லிணக்க மலையாக திருப்பரங்குன்றத்தை அறிவிக்க வேண்டும் என மதுரையில் நடந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

### மதநல்லிணக்க மாநாடு

மதுரை மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பின் சார்பாக திருப்பரங்குன்றம் தமிழர்களின் பெருமிதம், மதநல்லிணக்க அடையாளம் எனும் தலைப்பில் மத நல்லிணக்க மாநாடு மதுரை கே.கே. நகரில் உள்ள கிருஷ்ணய்யர் மகாலில் நேற்று நடந்தது. மாநாட்டிற்கு வக்கீல் வாஞ்சிநாதன் தலைமை தாங்கினார். விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், சு.வெங்கடேசன் எம்.பி., எஸ்.டி.பி.ஐ. கட்சி தலைவர் நெல்லை முபாரக், பூமிநாதன் எம்.எல்.ஏ. அய்யா வைகுண்டர் தலைமைபதி பாலபிரஜாபதி அடிகளார், முன்னாள் எம்.எல்.ஏ.வும், மக்கள் விடுதலை கட்சியின் தலைவருமான முருகவேல் ராஜன், ம.தி.மு.க. மாநில பொருளாளர் செந்திலதிபன் உள்ளிட்ட பல்வேறு கட்சி, அமைப்புகளை சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டு பேசினர்.

இதில், தொல்.திருமாவளவன் பேசுகையில், ஒவ்வொருவருக்கும் அவரவர் மதத்தின் மீது நம்பிக்கை உண்டு, அந்த நம்பிக்கையில் நாம் தலையிடவில்லை, அதனை பின்பற்றினால் மதநல்லிணக்கம் துளிர்க்கும். அதை புரிந்து கொள்ளத்தான் இந்த மாநாடு.

நாம் இந்து சமூகத்தை விமர்ச்சிக்கிறோம் என கூறுகிறார்கள், இந்து மத நம்பிக்கை வேறு, இந்து மத நம்பிக்கையை பயன்படுத்தி அரசியல் செய்வது வேறு.

மதத்தை, கையில் எடுத்து மதத்திற்கு எதிரான அரசியலை விதைப்பதால்தான் பிரச்சினை எழுகிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என்றால் மத நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டும் என்றார்.

### தீர்மானங்கள்

மாநாட்டில், திருப்பரங்குன்றம் மலையின் பன்மைத்துவத்தை, மதநல்லிணக்க மரபை தமிழக அரசு பாதுகாப்பதுடன், தமிழகத்தின் மதநல்லிணக்க மலையாக திருப்பரங்குன்றம் மலையை அரசு அறிவிக்க வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன்பே தீர்ப்பால் தீர்க்கப்பட்ட பிரச்சினையில் மக்களிடையே மத பிளவை உருவாக்கும் வகையில் திருப்பரங்குன்றம் கோவிலில் புகுந்து கலவரம் செய்த கட்சிகள், அமைப்புகள், ஐகோர்ட்டு உறுதிமொழி கொடுத்துவிட்டு, அதனை மீறிய நபர்கள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### ஒற்றுமையாக

திருப்பரங்குன்றம் மக்கள் மதவேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

மதுரை மாநகர், புறநகர், திருப்பரங்குன்றம் பகுதி முழுவதும் அனைத்து வார்டுகளிலும் மதநல்லிணக்க குழுக்கள் உருவாக்கி மதுரையின் அமைதி, வளர்ச்சி, மத நல்லிணக்கத்தைக் காக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.